பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை – 4

26 11 2026 THURSDAY - 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட அரசியல் சாசனம், தொடர்ந்து நம்மை வழிநடத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. உணவு தானிய உற்பத்தி, கடந்த நிதியாண்டில் 37 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தேசிய பால் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. எகிப்தில் நேரிட்ட தீ விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர், 21 பேர் காயமடைந்தனர்.

5. பிம்ஸ்டெக் 23 வயதுக்குட்பட்டோருக்கான தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட அரசியல் சாசனம் தொடர்ந்து நம்மை வழிநடத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசியல் சாசன தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நமது ஜனநாயகத்தின் விலை மதிப்பற்ற பாரம்பரியமாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் மாண்புகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தமது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, நாளிதழில் தாம் எழுதிய கட்டுரையையும் பகிர்ந்துள்ள பிரதமர், அதுகுறித்த விவரங்களை தமிழில் எடுத்துரைத்துள்ளார்.

அரசியல் அமைப்பை தேசிய ஜனநாயக கூட்டணி எவ்வாறு வலுப்படுத்தியுள்ளது என்பது குறித்தும் இந்த கட்டுரையில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சமூக மற்றும் பொருளாதார நீதியை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இந்தக் கட்டுரையில் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அரசியலமைப்புக்கு உரிய மதிப்பளிக்காமல் செயல்பட்டதாக அந்த கட்டுரையில் பிரதமர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி ஆக்கபூர்வமாக செயல்படாமல், நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக செயல்படும் கட்சியாக மாறியுள்ளது குறித்தும், இந்தக் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில், அரசியல் சாசன முகவுரையையை வாசித்து, உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதுதில்லி ஆகாஷ்வாணி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அதன் தலைமை இயக்குநர் திரு. மதுநாக் மற்றும் அலுவலர்கள் பங்கேற்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

தமிழகத்தின், சேலத்தில் உள்ள சட்டக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கௌரவப் பேராசிரியர் பவதாரணி நாச்சியார். சட்டம் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்-பவதாரணி 35 செகண்ட்ஸ்)

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், மாநிலங்களின் ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்கள் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

>>>>><<<<<

உணவு தானிய உற்பத்தி, கடந்த நிதியாண்டில் 37 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 208 லட்சம் டன் அதிகம் என்று தெரிவித்தார்.

உலக அளவில் அரிசி உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து இரண்டாவது முறையாக முன்னணியில் உள்ளதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>><<<<<

தேசிய பால் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

வெண்மைப்புரட்சிக்கு வித்திட்ட டாக்டர் Verghese Kurien-ன் பிறந்த தினம் தேசிய பால் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அஸ்ஸாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா, 10 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய், இந்நாளையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மும்பை தீவிரவாத தாக்குதல் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

2008ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலை முறியடிப்பதற்காக, துணிச்சலுடன் போராடி உயிர் நீத்த காவல்துறை மற்றும் பாதுகாப்பு படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், மற்றும் மத்திய அமைச்சர்கள், உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

>>>>>><<<<<<

கேரளத்தின் திருவனந்தபுரத்தில் குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்வதில் ஏற்படும் குறைபாடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் அம்மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. Mons Joseph தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சாலைப் பணிகளின் போது சேதமடைந்த குடிநீர் விநியோக குழாய்களை சீரமைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணங்கள் குறித்து இந்த குழு ஆராயும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இந்தியா - நெதர்லாந்து இடையே கடல்சார் ஒத்துழைப்பிற்கான பேச்சுகள் Hague-ல் நடைபெற்றன.

கப்பல் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. Shantanu Thakur தலைமையிலான குழுவினர் இப்பேச்சுகளில் பங்கேற்றனர்.

துறைமுகங்களை நவீனப்படுத்துவதற்கு இந்த பேச்சுக்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

எகிப்தில் நேரிட்ட தீ விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர், 21 பேர் காயமடைந்தனர்.

Giza மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சுரங்கப் பாதையில் பெட்ரோலிய பொருட்களை ஏற்றிச் சென்ற டேங்கர் லாரி தீ விபத்துக்குள்ளாகி வெடித்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் சாலையில் சென்று கொண்டிருந்த 12க்கும் மேற்பட்ட நான்கு மற்றும் இரு சக்கர வாகனங்கள் முழுமையாக தீயில் கருகியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 450 கோடி பரிவர்த்தனைகள் என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

11க்கும் மேற்பட்ட நாடுகள் நமது டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை முறையை பின்பற்றுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பிம்ஸ்டெக் 23 வயதுக்குட்பட்டோருக்கான தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புவனேஷ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 100 மீட்டர் ஓட்டப் பிரிவில் Mrithika-வும், ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பிரிவில் Hithesh-ம், மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் Sonam Parmar-ம், மகளிர் வட்டு எறிதலில் பிரியாவும், ஆடவர் Triple Jump பிரிவில் Daksh Bishnoi-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் சுனிதா தேவியும், ஆடவர் 100 மீட்டர் ஓட்டப்பிரிவில் Rushiprasad Desai-யும், மகளிர் வட்டு எறிதலில் Nihita Kumari-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டத்தில் Rahul Sarnaliya வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>>>>><<<<<

லக்னோவில் நடைபெற்று வரும் சையத் மோடி பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Unnati Hooda மற்றும் Anmol Kharb-யும், இரட்டையர் பிரிவுகளில் Viraj Kuvale - Rutaparna Panda மற்றும் சாத்விக் ரெட்டி - ரேஷிகா இணைகளும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>>><<<<<

தாய்லாந்து பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Munna Khalid - Shashank Kumar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 15-4, 15-6 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Karasap – Suphachip இணையை வென்றது.

>>>>><<<<<

உலக Cadet செஸ் போட்டியின், நான்காவது சுற்று முடிவில் 10 வயதுக்குட்பட்டோருக்கான ஓப்பன் பிரிவில் இந்தியாவின் Sattwik Swain முதலிடத்தில் உள்ளார்.

Georgia-வின் Batumi-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் Nakshatra Gumudavelly முதலிடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக செஸ் சாம்பியன் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் Ethan Vaz ஓப்பன் பிரிவில் முதலிடத்தில் உள்ளார்.

வெனிசுலாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் *Savitha Shri*-ம் முதலிடத்தில் நீடிக்கிறார்.

>>>>><<<<<

தோஹாவில் நடைபெற்று வரும், வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா-ஏ அணி இன்று இலங்கை-ஏ அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

Yokohama Keio சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - நெதர்லாந்தின் *Thijmen Loof* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் *Syndrela Das* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியின் *19* வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு, முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *9-11, 11-6, 11-6, 11-8, 11-9* என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் *Sally Moyland*-ஐ வென்றார்.

>>>>><<<<<